சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல் முறைகள், சென்னை - 08

ந.க.எண். 9331/அ5/2024 நாள். 05 .05. 2024

பொருள்: பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம்-12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள்- வெளியிடுதல் பொதுத்தேர்வு தேர்ச்சி முடிவுகள் சார்ந்து அனைத்து வகை மேல்நிலைப் பள்ளிகளும் அறிக்கை அனுப்பக் கோருதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (நிலை) எண். 14, நாள். 29.01.2018

சென்னை-06,அரசுத்தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ள செய்திக்குறிப்பு நாள்.05.05.2024

-----------------------

பார்வையில் காணும் அரசுத்தேர்வுகள் இயக்கத்தின் செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு 06.05.2024 அன்று காலை 9.30 மார்ச்/ ஏப்ரல் 2024 நடை பெற்ற மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வு முடிவுகள் வெளியிடப்படவுள்ளன.

தேர்வு முடிவுகள் வெளியானவுடன் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நான்கு படிவங்களில் விவரங்களை பூர்த்தி செய்து முதல் 3 படிவங்களை 06.05.2024 அன்று மாலை 4 மணிக்குள் அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்/முதல்வர்கள் கீழ்க்கண்ட அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | தேதி | பள்ளியின் வகை | அலுவலகம் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|
| 1 | 06.05.2024 | அனைத்து அரசு / ஆதிதிராவிட பள்ளிகள் | முதன்மைக் கல்வி அலுவலகம் | ceochn@nic.in |
| 1 | | அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகள் | சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை) | deosouthsec.schools@gmail.com<br>deonortha2section@gmail.com |
| 2 | | அனைத்து ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளிகள் | சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலகம்(தொடக்கக் கல்வி) | deedeochennai@gmail.com |
| 3 | | அனைத்து தனியார் மேல்நிலைப் பள்ளிகள் | சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலகம் ( தனியார் பள்ளிகள்) | deoegmpvtsch@gmail.com<br>deoprivatesouthchennai@gmail.com |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 4 | | அனைத்து சென்னை பள்ளிகள் | கல்வி அலுவலகம், பெருநகர சென்னை மாநகராட்சி | gcceo2021@gmail.com |

கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர்களும் பூர்த்தி செய்த படிவங்களை தொகுத்து 07.05.2024 அன்று மாலை 3.00 மணிக்குள் முதன்மைக்கல்வி அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அனைத்து அரசு/சென்னை/ஆதிதிராவிட மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அனைவரையும் அவர்களின் உயர்கல்வி சேர்க்கையை உறுதி செய்யும் பொருட்டு 06.05.2024 முதல் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குழு செயல்பட உள்ளதால் அனைத்து மாணவர்களும் தங்கள் பயின்ற பள்ளிக்கு அனைவரின் வருகையை உறுதி செய்யுமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்ச்சி பெறாத மற்றும் பொதுத் தேர்விற்கு வருகை புரியாத மாணவர்கள் நடைபெறவிருக்கும் உடனடி தேர்வுகளில் கலந்து கொண்டு தேர்ச்சி பெறும் வகையில் பயிற்சி அளிக்க ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5-5-24

முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை

பெறுநர்

1. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-03.
2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்( இடைநிலை ) சென்னை மாவட்டம்
3. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்( தனியார் பள்ளிகள் ) சென்னை மாவட்டம்
4. மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கல்வி) சென்னை மாவட்டம்
5. அனைத்து தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் சென்னை மாவட்டம்

நகல்

சென்னை -06 அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது